www.padippakam.com

# கப்பலோட்டிய தமிழன் குரல்

ஆசிரியர்: வ.உ.சி.ஆ.சண்முகசுந்தரம்,பி.ஏ.,பி.எல்

நவம்பர் 2000 ஆண்டு சந்தா ரூ. 50

## வ.உ.சி. நினைவு நாளில் சி.ஐ.டி.யு. வரலாறு படைக்கிறது தொழிலாளிவர்க்கத்தின் சாதி எதிர்ப்பு மனித சங்கிலி

கடந்த 10 ஆண்டுகளாக சென்னையில் வ.உ.சி. அறக்கட்டளை நடத்தி வரும் வ.உ.சி. நினைவு நாள் நிகழ்ச்சிகளில் இந்த ஆண்டில் ஒரு திருப்புமுனை அமைந்தது.

கடந்த ஆண்டுகளிலும் வ.உ.சி. பிறந்த நாளிலும் நினைவு நாளிலும் உ.மா.ம., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யூ.சி., தொ.மு.ச. போன்ற அமைப்புகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டு சாதி எதிர்ப்பு மனித சங்கிலிகளை அமைத்திருக்கின்றன.

இவ்வாண்டு செப் 5-ம் நாள் வ.உ.சி. பிறந்த நாளிலும் தொழிலாளர்கள் ஒரே நேரத்தில் ஒன்றாக திரண்டுவராமல் விட்டு விட்டு திரள் திரளாக வந்து சென்னை துறைமுக வாயிலுள்ள வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து சாதி



படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பியும் தொழிற்சங்க அமைப்பு களில் சாதிவெறியைக் கிளப்பி விட்டு தொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் முதலாளிவர்க்கத்தின் சூழ்ச்சியைக் கண் டித்தும் தொழிலாளர்வர்க்க ஒருமைப்பாட்டை வலியுறுத்தி சபதமேற்று சென்றனர்.

இந்த நிலைமையில் வ.உ.சி.யை நினைவு கூர்வது அவருடைய நினைவு நாளில் சாதி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மாக இருக்க வேண்டும் என்று சி.ஐ டி.யூ.வின் தமிழ் மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஏ. சவுந்தரராசன் சில நாட்களுக்கு முன் வ.உ.சி. அறக்கட்டளை செயலா ளரிடம் தெரிவித்தார்.

அம்முறையில் வ.உ.சி. நினைவு நாளில் (நவ.18 ல்) சென்னையிலுள்ள வ.உ.சி. சிலை முன்பு சாதி எதிர்ப்பு மனித சங்கிலி அமைக்க வ.உ.சி. அறக்கட்டளை தொழிற் சங்க அமைப்புகளுக்கு அழைப்பு விட்டது.

அதற்கேற்ப முந்தைய ஆண்டுகளில் அமைந்த சாதி எதிர்ப்பு மனித சங்கிலிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத் தகுந்த எழுச்சி மிக்கதாக இந்த ஆண்டில் மனித சங்கிலி அமைந்திருந்தது.

துறைமுக பொறுப்புக்கழக தலைவர் திரு. பாஸ்கர தாஸ் ஐ.ஏ.எஸ் மற்றும் அதிகாரிகளும், மற்ற தலைவர் களும் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்த சமயங்களில் பல அமைப்புகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் சிலை முன் குழுமி எழுச்சிமிகு சாதி எதிர்ப்பு முழக்கங்களை எழுப் பினர்.

பின்னர் நடைபெற்ற தொழிலாளர் கூட்டத் தில் தொழிற்சங்க இயக்கத்தில் சாதி ஊடுருவலின் அபா யத்தை எடுத்துக்காட்டி தலைவர்கள் உரையாற்றினர்.

பின்னர் நடைபெற்ற மனித சங்கிலியில் உ.மா.ம., ஏ.ஐ டி.யூ.சி., தொ.மு.ச.வைச் சேர்ந்த தொழிலாளர் களும் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த மனித சங்கிலி சிறப்புடன் அமைந்ததற்கு சி.ஐ.டி யூ.வைச் சேர்ந்த தொழிலாளர்கள் காட்டிய கட்டுப்பாடுதான் காரணமாக இருந்தது. இராணுவக் கட்டுப்பாட்டை மிஞ்சும் முறையில் அது இருந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் ஒருவர் கூட கலைந்து செல்லாமல் கூட்டத்தை முடித்து விட்டு மனித சங்கிலியில் கைகோர்த்து நின்று சாதி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர்.

அடையாள பூர்வமாகத்தான் எல்லா சங்கங்களையும் சேர்ந்து கொள்ளச் செய்யாமல் (இதற்கு வர ஒரு நாள் ஊதியத்தை இழக்க வேண்டியிருக்கும்) இந்த மனித சங்கிலி அமைக்கப்பட்டது. எனினும் 500க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சாதி எதிர்ப்பு முழக்கங்களை (தோழர் நரேந்தன் இதை முன்னின்று நடத்தினார்) எழுப்பி இந்த ஆண்டு வ.உ.சி. நினைவு நாளில் புதிய எழுச்சியை உண்டு பண்ணியுள்ளனர். இனி வ.உ.சி. நினைவு நாள் என்றால் மனித சங்கிலி உயர்நீதிமன்றம் வரை நீண்டு இருக்கும் என்று தொழிலாளர்கள் தோழர் சவுந்தராஜனிடமும் அறக்கட்டளை செயலாளரிடமும் உறுதி அளித்தனர்.

**குறிப்பு:**

"தீக்கதிர்" பத்திரிகை சாதி எதிர்ப்பு மனித சங்கிலி, மற்றும் கூட்டப்படங்களையும் செய்திகளையும் வெளியிட்டுள்ளது. சாதி சங்கங்களின் செய்திகளைப் போடும் மற்ற பத்திரிகைகள் தொழிலாளர்களின் எழுச்சியை வெளியிடவில்லை. பத்திரிகைகளுக்கு சமூகப் பார்வை இருக்க வேண்டாமா?

ஆசிரியர் வெளியிடுவோர் : உரிமையாளர்
வ.உ.சி.ஆ. சண்முகசுந்தரம், B.A.,B.L.
எண்.2, 50வது தெரு, அசோக் நகர், சென்னை-83.
தொலைபேசி : 4713306
அச்சிட்டோர் : பி.ஆர்.பிரஸ், 16, வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.



படிப்பகம்

www.padippakam.com

# சிஐடியு தொழிற்சங்கத்தினர் நேர்மையை கடைபிடிப்பவர்கள்

## முன்னாள் ஐ ஏ எஸ் அதிகாரி பேச்சு

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 64-வது நினைவு தினத்தையொட்டி சனிக்கிழமையன்று சென்னை துறைமுகம் வாயிலில் சாதி எதிர்ப்பு மனித சங்கிலி நடைபெற்றது.

வ.உ.சி. அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற நினைவு தினக்கூட்டத்திற்கு சிஐடியு மாநில துணைப் பொதுச் செயலாளர் அ. சவுந்தரராசன் தலைமை தாங்கி உரையாற்றினார். அவர் தம் உரையில். அந்நிய பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக சுதேசி கப்பலை ஓட்டிய வ.உ.சி, இந்திய தொழிலை பாதுகாக்க அப்போதே பாடுபட்டவர். தனது கொள்கைக்காக அனைத்து சுகங்களை துறந்தவர். அப்பேற்பட்ட சுதந்திர போராட்டத் தியாகியை சிலர் ஜாதி தலைவராக சித்தரிக்க முயற்சிக்கின்ற னர்.

இது வ.உ.சியின் தியாகத்தை கொச்சைப்படுத்துவதாகும். சென்னை துறைமுக தொழிற்சங்க தலைவர்களில் முன்னோடியாக திகழ்ந்த வ.உ. சிதம்பரம் பிள்ளையின் வரலாற்றை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று அ. சவுந்தரராசன் பேசினார்.

ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான பி. பாண்டியன் பேசுகையில் வ.உ.சி. சிந்தனையில் காரல் மார்க்ஸ் கொள்கைப்பிடிப்பில், ஏங்கல்ஸ் செயல்பாட்டில் ஸ்டாலின் என்று கூறியதோடு சிஐடியூவின் தொழிற்சங்க பணிகளை பாராட்டினார்.



படிப்பகம்

www.padippakam.com

நான் தஞ்சை அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநராக இருந்தபோது சிஐடியூ உட்பட அனைத்து அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங் களும் இருந்தன. தொழிற்சம்பந்தமான எந்த பேச்சு வார்த்தை நடந்தாலும் சிஐடியூ தலைவர்களையும் அழைத்து கலந்தாலோசனை செய்வேன். இதனால் பலருக்கு என் மீது அதிருப்தியடைந்தனர். எனக்கு எண்ணிக்கையில் நம்பிக்கையில்லை. சிஐடியூவிற்கு தனித்தன்மை உண்டு.

சி.ஐ.டி.யூ. சங்கத்தலைவர்கள் கொள்கைபிடிப்பு உள்ள வர்கள் என்பதில் ஐயமில்லை. எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் விலைக்கு வாங்க முடியாது. இவ்வாறு பி. பாண்டியன் உணர்ச்சி பொங்க பேசினார்.

வ.உ.சி. அறக்கட்டளை செயலாளரும் வ.உ.சி. பேரனுமான வ.உ.சி. ஆ. சண்முகசுந்தரம் பாட்டனாரின் தியாகத்தை நினைவு கூர்ந்து பேசினார். அசோக் லேலண்டு தொழிற்சாலையின் மேலாண்மை இயக்குநர் டி.எம். ஜவகர்லால் மற்றும் கோ. முத்து (உழைக்கும் மக்கள் மாமன்றம்), டி.என். கபாலி (சிம்சன்), வி.கே. கோவிந்த சாமி (துறைமுகம்), நரேந்திரன் (தமுஎச) ஆகியோர் பேசினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டச் செயலாளர் கே. கிருஷ்ணன், சிஐடியூ மாவட்டச் செயலாளர் பி.என். உண்ணி மற்றும் மு. சம்பத் (ஏஐடி யூசி), எஸ். வெங்கட்ராமன் (சிஐடியூ). எஸ். தங்கம் (ஆட்டோ தொழிலாளர் சங்கம்), பக்தவச்சலு (போக்கு வரத்துக் கழகம்), சாரங்கபாணி (கட்டுமானம்) உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக சாதி எதிர்ப்பு மனித சங்கிலியாக அனைவரும் அணிவகுத்து நின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# சாதிக் கட்சிகளால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து

''சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாபம்'' என்று பாரதியார் பாடியிருக்கிறார். சமூக ஒற்றுமைக்கு ஊறாக சாதியுணர்வு இருப்பதை ஔவை பிராட்டி காலந்தொட்டு பாரதியார் காலம் வரை எடுத்துரைக்காத கவிஞர்களே இல்லை. சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையே சாதிகள் ஒழிந்த சமுதாயம் மலர வேண்டும் என்பதாகவே இருந்திருக்கிறது. சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் சாதியை எதிர்த்துப் பேசுவதுடன் நிற்காமல் தாங்களே கலப்பு மணம் செய்து கொண்டு சாதி ஒழிப்புக்கு எடுத்துக்காட்டாக இருந்திருக்கின்றனர் குத்தூசி குருசாமி-குஞ்சிதம் அம்மையர், நெ. து. சுந்தர வடிவேலு-காந்தம்மாள் கலப்பு மணம் செய்து கொண்டு சாதி எதிர்ப்புக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். அதே போல் கம்யூனிஸ்ட் தலைவர்கள் பி. ராமமூர்த்தி — அம்பாள், ப. ஜீவானந்தம் — பத்மாவதி, பி சீனிவாசராவ்—நாச்சாரம்மாள் முதலானோர் சாதி ஒழிப்புக்கு கலப்புத் திருமணமே சிறந்த வழி என்று பிறருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளனர்.

அண்மையில் மறைந்த அரசியலைத் தூய்மைப்படுத்த குரல் கொடுத்து வந்த முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம் பெரும் எதிர்ப்புக்கிடையே வேற்று சாதியைச் சேர்ந்த சகுந்தலா அம்மையாரை திருமணம் செய்து கொண்டிருந்தார். ஆனால் அவருடைய பேத்தி முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்தவரை மணம் புரிவதற்கு குடும்பத்தில் எதிர்ப்பு வந்தும் சி. எஸ். இந்தத் திருமணத்துக்கு ஆதரவளித்து மதமோ, சாதியோ ஒருவருடைய வாழ்க்கை அமைவதற்குக் குறுக்கே நிற்க முடியாது என்று விளக்கியிருக்கிறார்.

அரசியலில் பண்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்த எம். ஆர். வெங்கட்ராமன் குடும்பமே இந்திய ஒருமைப்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தது, அவருடைய அண்ணன் மகன் "சின்னச் சின்ன மூக்குத்தியாம் சிவப்புக் கல்லு மூக்குத்தியாம்" என்பது போன்ற சாகாவரம் பெற்ற பாடல்களுக்கு இசையமைத்திருந்த எம். ஆர். பி. சீனிவாசன் உலக சமாதான இயக்கத் தலைவர் டாக்டர் கிச்சுலுவின் மகளைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். ஜார்ஜ் பெர்னான்டஸ் மௌலானா அபுல்கலாம் ஆசாதின் செயலாளராக இருந்த ஹுமாயூன்கபீரின் மகளைத் திருமணம் செய்திருக்கிறார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சாதியுணர்வு தலைதூக்க முடியவில்லை. அன்று வெள்ளையர்களை எதிர்த்து கட்டபொம்மன் போர்க்கொடி உயர்த்தியபோது பாதர் வெள்ளை என்று அழைக்கப்பட்ட வெள்ளையத் தேவனும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுந்தரலிங்கமுமே தளபதிகளாகத் திகழ்ந்து வகுப்பு ஒற்றுமையின் இலக்கணமாகவுள்ளனர்.

சுதந்திரம் பெற்ற நாட்டின் 1952-ல் நடைபெற்ற முதல் தேர்தலில் ஜனசங், ராம்ராஜ்யபரிஷத்கண தந்திர பரிஷத் போன்ற வகுப்புவாத கட்சிகள் வெற்றி பெறவில்லை. காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சி தானிருந்தது.

ஆந்திராவையும் உள்ளடக்கியிருந்த சென்னை மாநில, சட்டமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 52-எம்.எல்.ஏக்கள் இருந்தனர். வெங்கடேஸ்வரலு, நாகிரெட்டி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பி. ராமமூர்த்தி, ப. ஜீவானந்தம், எம். கல்யாணசுந்தரம், கே. டி. ராஜூ, ஏ. கே. சுப்பையா, பெரும் நிலச்சுவான்தார் குன்னியூர் சாம்பசிவ ஐயரைத் தோற்கடித்த வெங்கடேச சோழகர் போன்றவர்களெல்லாம் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்து உண்மையான மக்கள் பிரதிநிதிகளாகத் திகழ்ந்தனர். அப்போதிருந்த எம்.எல்.ஏக்களுக்கும் பின்னர் வந்த எம்.எல்.ஏக்களுக்கும் தான் எத்தனை வேறுபாடு?



படிப்பகம்

www.padippakam.com

# சாதியை மட்டும் வைத்து வெற்றிபெறுபவர்கள் கையில் ஆட்சிபோலாமா ?

மதவெறியைத் தூண்டிவிட்டு உருவாகும் வகுப்பு வாதத்தை விட சாதி வெறியைத் தூண்டி விட்டு உருவாகும் வகுப்புவாதம் எவ்வளவு ஆபத்தானது என்பதை இப்போது அரசியல் கட்சிகள் நன்கு உணரவில்லை.

திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் பரப்பியிருந்த சுயமரியாதை கருத்துக்களால் மக்கள் தங்களுடைய பெயர்களுக்குப் பின்னால் சாதிப் பெயரைச் சேர்க்கும் பழக்கம் மறையத் தொடங்கியது. அதற்கு முன் ஒருவருடைய பெயருக்குப் பின்னால் அவர் சாதிப் பெயரைக் கூறி அழைக்காவிட்டால் அவமரியாதை செய்வதாகக் கருதப் பட்டது. ஆனால் இந்த எண்ணம் மறைந்து ஈ.வெ. ராமசாமி நாயக்கர் என்பதற்குப் பதில் பெரியார் ஈ.வெ. ராமசாமி என்று அவர் அழைக்கப்பட்டார். ஆனால் அவருடைய அரசியல் எதிரிகளால் நடத்தப்படும் இந்து போன்ற பத்திரிகைகள் இன்றும் கூட ராமசாமி நாயக்கர் என்றே போடுகின்றன. வ.உ.சிதம்பரம் பிள்ளை என்ற பெயருக்குப் பதில் வ.உ.சிதம்பரனார் என்ற பெயர்தான் வழக்கத்துக்கு வந்திருக்கிறது. பல்லாண்டு பழகியிருந்தும் ஒருவருடைய சாதி என்ன என்று தெரியாதிருந்த நிலைமை அன்று இருந்தது.

எனினும், தமிழ்நாட்டில், சாதி அடிப்படையில் அரசியல் கட்சி தோற்றுவிக்கப்பட்டு வன்னியர் ஓட்டு அன்னியருக்கு இல்லை என்று முழக்கம் எழுப்பப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட மாணிக்கவேலர் சாதி உணர்வைத் தூண்டிவிட்டு காமன்வீல் கட்சியை தேர்தலில் வெற்றி பெற வைத்தார். காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் கூட சாதிக் கட்சிகளால் வரும் கேடுகளை அன்று சரிவர உணர முடியவில்லை. காங்கிரஸ் எதிர்ப்பு உணர்வை பயன்படுத்தி திராவிட நாடு பிரிவினைக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஆதரவை தெரிவிக்கும் கடிதத்தைக்கூட அப்போது தேர்தலில் போட்டியிடாத தி.மு.கழகத்துக்கு மாணிக்கவேலு நாயக்கர் கொடுத்தார். பின்னர் காங்கிரஸ் எதிர்ப்பு உணர்வைப் பயன்படுத்தி எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர் அமைச்சர் ஆக வேண்டும் என்ற ஆசையில் காங்கிரசுக்கு ஆதரவளிக்கும் நிலையை எடுத்து ராஜாஜி அமைச்சரவையில் அமைச்சரானார். அப்போது "மக்கள் துரோகி மாணிக்க வேலர்" என்ற நாடகம் பிரபலமாகி ஊர்தோறும் அந்த நாடகம் நடத்தப்பட்டதால் அரசாங்கம் அந்த நாடகத்துக்குத் தடை விதித்தது. இன்றும் கூட எஸ்.எஸ். ராமசாமி படையாச்சிக்கு சிலை வைக்கப்படுகிறதென்றால் அவருடைய பெயரில் மாவட்டம் வருகிறதென்றால் நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கு எதிரான சாதிவெறிக்கு இரையாகியிருப்போரை அலட்சியப்படுத்த முடியாத நிலைமை இன்று எழுந்திருப்பதே அதற்குக் காரணம்.

காங்கிரஸ் அசைக்க முடியாத சக்தியாக கருதப்பட்ட காலத்திலேயே ராமநாத் கோயாங்கா போன்ற பெருமுதலாளியை திண்டிவனம் தொகுதியில் திருக்குறள் முனுசாமி தோற்கடிக்க முடிந்திருக்கிறது.

சுதந்திரப் போராட்டத்தில் வெளிப்பட்ட பெருந்தலைவர் காமராசர் 1952-ல் தேர்தலில் காங்கிரஸ் தோற்றதால் முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராஜா மற்றும் பக்தவச்சலம் போன்ற அமைச்சர்களெல்லாம் தோற்றதால் அந்தத் தீர்ப்பை ஏற்று ஆந்திர கேசரி பிரகாசம் தலைமையிலமைந்திருந்த அணிக்கு அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பைக் கொடுக்கத் தயாராக இல்லை.

சிறுபான்மை காங்கிரஸ் கட்சியை சட்டமன்றத்தில் பெரும்பான்மை கட்சி ஆக்குவதற்கு மாணிக்கவேலர், ராமசாமி படையாச்சி போன்ற சாதித்தலைவர்களுக்கெல்லாம் அமைச்சர்பதவி கொடுக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# துண்டு துக்காணி கட்சிகளுக்கு பிரதான கட்சிகள் பணிகின்றன

கோழிச் சின்னத்தில் நின்ற ராமசாமி படையாச்சியின் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி (T.N.T. Party) காங்கிரஸ் அணியில் சேர்ந்ததை கேலி செய்து ஒரு பத்திரிகை கார்டுன் போட்டது. கொக்கரக்கோ என்று கத்திக் கொண்டிருந்த சேவல் காமராசர் வயிற்றுக்குள் போனதை தனியாக சேவலையும் பின்னர் பக்கத்தில் காமராசர் வயிற்றில் சேவல் மறைந்திருப்பதைக் காட்டும் அவருடைய வயிறு பெரிதாக இருப்பதையும் போட்டுக் காட்டியது.

இந்தியாவில் கட்சிமாறி அமைச்சராகும் அரசியல் தமிழ்நாட்டில் தான் தொடங்கியது. மதவெறியில் வரும் வகுப்புவாதத் தீமையை உணர்ந்திருந்த காமராசர் போன்ற தலைவர்கள் சாதியிலிருந்து வரும் வகுப்புவாத அபாயத்தை சரியாக உணராதிருந்ததே அதற்குக் காரணமாகும்.

சாதி வெறியர்களை ஊக்குவித்தால் மக்கள் பிரச்னைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு சாதியைப்பார்த்தே ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி பீடத்துக்கு வருபவர்களால் நாடு சின்னாபின்னமாகாதா பொருளாதார முன்னேற்றம் தடைபடாதா என்று அன்று சுதந்திரத்துக்குப் போராடிய காங்கிரஸ் கட்சியே உணரவில்லை.

காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக முஸ்லீம்லீக், மற்றும் சாதிகட்சிகளுடன் கூட்டுச் சேரும் நிலையை திராவிட, மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் எடுத்ததின் விளைவு ஒவ்வொரு சாதியும் இன்று தனிதனி துண்டு துக்காணி கட்சிகள் அமைத்து சட்டமன்றத்திலும் இடம்பிடித்து பிரதான கட்சிகளிடம் பேரம்பேசி ஆட்சியில் இடம்பிடிக்கவும் நாட்டின் தலைவிதியை மாற்றவும் முற்படும் நிலைமை எழுந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# சாதி ஒழிப்புக்கு நாட்டுநலன் நாடுவோர் கவனம் செலுத்த வேண்டும்

அமெரிக்காவில் இப்படி குறுகிய நோக்கத்துடன் துண்டுதுக்காணி கட்சிகள் தேர்தலில் நின்று ஆட்சிக்கு வர முடியாது. அங்கு அதிபராக வருபவர் ஒவ்வொருவாக்காள ரிடமும் நேரடி வாக்குவாங்கி தேர்ந்தெடுக்கப்பட முடியாது. Electrol Collegeக்கு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளே அதிபரை தேர்வுசெய்கின்றனர். ஒவ்வொரு மாநிலத்துக்கும் குறிப்பிட்ட பிரதிநிதிகள் எண்ணிக்கை இருக்கிறது. W.T.A. (Winnor takes all) முறையில் ஒரு மாநிலத்தில் வெற்றி பெற்றவருக்கே எல்லா வாக்குகளும் போவதால் அமெரிக்காவில் இரண்டே இரண்டு கட்சிகள் இருக்கும் நிலைமையும் துண்டு துக்காணி கட்சிகள் தோன்ற முடியாத நிலைமையும் இருக்கிறது.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் சாதிக் கட்சிகள் முளைத்திருக்கின்றன. பீகாரில் லாலுபிரசாத் யாதவ் தன்னிடம் My constituancy இருப்பதாகச் சொல்லுகிறார் M என்றால் முஸ்லீம் Y என்றால் யாதவ் இந்த இரு சமூகங்களும் சேர்ந்திருந்தால் 950 கோடி மாட்டுத் தீவன் ஊழல் குற்றாச் சாட்டுக்குள்ளாகியிருக்கும். லாலுபிரசாத் யாதவ் தன்னை அசைக்க முடியாது என்று கூறுகிறார்.

சுதந்திரத்துக்குப் போராடிய காங்கிரஸ் கட்சியே அவருக்குத் தலைவணங்குகிறது.

தமிழ்நாட்டிலும் சாதிக்கட்சிகள் பிரதான கட்சிகளையே மிரட்டுவதால் ஆளும்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த நிலைமையை மாற்ற கவனம் செலுத்த வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

வ.உ.சி. சுயசரிதைக்கு
இந்திய உச்சநீதிமன்ற முன்னாள் நடுவர்
நீதியரசர் ச. மோகன் அவர்கள் வழங்கியுள்ள

# அணிந்துரை

இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடியவர்களில் தென்னாட்டில் முதன்மையானவர் நம் நெஞ்சில் நீங்காதிருக்கும் வ.உ.சி. அவர்கள். நாட்டுப் பற்றின் மிகுதியில் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலையே உதறி எறிந்தார். அடிமைத் தளை அறுக்கப்பட வேண்டும் என அறுதியும் உறுதியும் கொண்டார். அதற்குக் கிடைத்த பரிசு சன்மானம், சிறைவாசம் மாட்டுக்கு மனிதன் இழைக்கின்ற கொடுமை போல், மனிதனே செக்கிழுத்த கொடுமை ஆனாலும் துவளவில்லை. துணிந்தால். உலகில் உள்ள எல்லா இன்னல்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பக்குவம் பெற்றார். உள்ள வலிமை பெற்றதின் காரணம் ஒரு கவிஞராக இருந்தார். பலருக்கு அது தெரியாது. உள்ளத்திலே பீறிடும் உணர்ச்சிகள் தான் அருமைக் கவிதைகளாக அருவி போல் தோன்றின. அந்த அருவியின் அழகை, அந்த நீரோட்ட பாங்கை எடுத்துக் காட்டுகிறது இந்த நயமிக்க நூல்.

வாழ்க்கை சரிதை, வாழ்வில் போராட்டங்கள் வண்ணப்பூக்களாக மலர்ந்துள்ளன.

பரலி.சு. நெல்லையப்பன் பரிந்து கேட்டார். பாக்கள் தோன்றி மாலையாக மாறின.

"நெல்லையப்ப நீ கனிவொடு கேட்டபென் கதைக்
குறிப்பிஃதே"

எனத் துவங்குகிறார் சொல்லின் அப்பர்.

நாட்டுச் சிறப்போடு நவினுறத் துவங்கி குடும்ப வரலாறு பின்னர்:



படிப்பகம்

www.padippakam.com

"இடும்பையுற்றவென் இயல்பினி மொழிவனே" எனத் தொடர்கின்றது. ஆசிரியர்கள் பெருமை கூறும் முகத்தான் "அறிவரிச் சுவடி, ஆத்திச்சூடி செறிவுறக் கேட்டு, ஆங்கிலமும் அழகுற" கற்பித்தார் என்கிறார். சட்டக் கல்வியை நடுவினைக் கல்வி என்று கவிஞர் உரைப்பது பரவசமூட்டுகிறது. "நாவில் நடுவில் நின்றாய் என்ற வரிக்கு ஒப்பாக உள்ளது. உயர்ந்த கருத்து சொல்லாக்கம்.

"நீதிபதியின் நெஞ்சம் திரும்பிட
சதி வழக்கினை உணர செய்தார்"

திருவள்ளுவரின் தெய்வ மாமறையின்
பெருவளக் குறள் சில பேணிப் படித்தார்

பின்னர் தான் வாழ்க்கையின் புரட்சிகரமான செயலை நாட்டு விடுதலைக்காக வித்திட்டார். அந்த செயல் திறனை நயம்பட உரைக்கிறார்.

"சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்
இதே என் கடைப்பிடி" என்றனன். அவனுரை
வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம்
சித்தம் அதனை சிதையாது வைத்தது"

என்ன திடமான உள்ளம்!

சிறையை துச்சமாக மதித்தார். இப்பெரியோர் சிறை செல்லக் கண்ட உற்றார் வருந்தியபோது "கவலற்க" என்றார். கோவை சிறைக்கு செல்லும் மயங்கிய மைத்துன னிடம் "மயங்கிடேல்" என்றார். நண்பர்கள் நனைந்த கண்ணுடன் வழியனுப்பினர் செக்கினை இழுக்கும் போது "அழச் சொல்லுகிறாயா" "அது செய்யேன்" என்றார் அஞ்சா நெஞ்சத்தினர். இப்படி இன்னல்கள் ஊடே இனிய முகத்தோடு இருந்தார். சிறைக்கூடம் அந்த சிங்கத்தால் சிறப்புப் பெற்றது. புனிதத் தலமாகியது. பூங்காவாக மாறியது. இறுதியில்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை ஆர்டர் அடுத்தது. நீவிர்
வீடுறலாமென விளம்பினன் ஜெயிலர்
மைத்துனன் அனுப்பிய பட்டை உடுத்தியான்
வீட்டடைந் தேன்மாண் வீட்டடைந்தேனே''

படிக்க, படிக்க தெவிட்டாத தேனமுது இந்தப் புத்தகம். தியாக தீபத்தின் ஒளிச்சுடர் இது! நாட்டுப்பற்று மிக்கதோர், தமிழ்பற்றுக் கொண்டோர். அறிவுசால் அனைவரும் தவறாது இந்த நூலைப்படித்து பண்பும் பயனும்பெற வேண்டும். நல்லவருக்கு-ஞாலம் போற்றும் அந்த நல்லவருக்கும் நாம் காட்டும் நன்றி வேறு என்ன இருக்க முடியும்? தழைத்து ஓங்குக தண்டமிழ் சிதம்பரனார் புகழ்!

ச. மோகன்

---

வ.உ.சி. அறக்கட்டளைத் தலைவர்

## எம். கோபாலகிருஷ்ணன்

பிறந்த நாள்—டிச. 10-ம் நாள் ஞாயிற்று கிழமை மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் காலை 10 மணி அளவில் சிறப்பு வழிபாடும் பின்னர் பிறந்த நாள் வாழ்த்தும் நிகழ்கிறது.

வ.உ.சி. அறக்கட்டளை

---

வ.உ.சி. ஆராய்ச்சியாளர்

## ஆ. இரா. வெங்கடாசலபதி-சு. அனிதா திருமணம்

வ.உ.சி. ஆராய்ச்சியில் திளைத்து டாக்டர் பட்டம் பெற்று நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் வரலாற்று துறை பேராசிரியராக இருக்கும் டாக்டர் ஆ. இரா. வெங்கடாசலபதி — சு. அனிதா திருமணம் சென்னையில் நவ 6-ல் இனிது நிகழ்ந்தது. மணமக்கள் எல்லா நலனும் பெறுக.

—வ.உ.சி. அறக்கட்டளை

---



படிப்பகம்

www.padippakam.com

# வ.உ.சி. சுயசரிதை வெளியீடு

சிறையிலிருந்து வ.உ.சிதம்பரனார் எழுதிய சுயசரிதை உழைக்கும் மக்கள் மாமன்ற தலைவர் ஆர். குசேலர் கேட்டுக் கொண்டதற்கேற்ப எண்ணூர் அசோக் லேலண்ட் தொழிலாளர் சங்கம் வெளியிடுகிறது. இதற்கான செலவை சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுள்ளனர்.

நூலுக்கு உச்சநீதிமன்ற முன்னாள் நடுவர் ச. மோகன் வ.உ.சி.யின் தியாக வரலாற்றை படம் பிடித்துக் காட்டும் அணிந்துரையை வழங்கியுள்ளார்.

வெளியீட்டு விழாவுக்கு தவத்திரு. குன்றக்குடி அடிகளார் பங்கேற்புடன் தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

வ.உ.சி. அறக்கட்டளை



படிப்பகம்

www.padippakam.com

Kappolotia Thamizhan Kural (Monthly)
Postal Reg. TN / Chief PMG-563 / 2000
Reg. No. RDIS 1023 / 975
Posted on November 25, 26, 2000 at
EGMORE RMS/1 PATRIKA CHANNEL.

# வ.உ.சி. சுயசரிதை

சிறைவாசம் இன்றிருப்பது போலல்லாமல் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டதை எதிர்த்து சிறையில் கலகம் வெடிக்கிறது.

வ.உ.சி.யின் தியாக வரலாற்றை அறிய உங்கள் பிரதிக்கு முன் பதிவு செய்துகொள்ளுக.

**விலை : ரூ. 5-00**

கிடைக்கும் இடங்கள் !

வ.உ.சி. அறக்கட்டளை
3, 50வது தெரு, அசோக்நகர்,
சென்னை-600 008.

உழைக்கும் மக்கள் மாமன்றம்
8, டாக்டர் வாசுதேவன் சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.



கோவை செல்வன்
3, Model School lane
C.I.T Nagar
சென்னை 600 035

படிப்பகம்